EMPLOYMENT ONTARIO
Ontario's employment & training network

Ontario

# ஆன்டாரியோ வேலைவாய்ப்பு ஆதார மையங்கள்

ஆன்டாரியோ வேலைவாய்ப்பு ஆதார மையங்கள் (Ontario Employment Resource Centres) வேலை தேடும் மக்களுக்கு வேலைச் சந்தைத் தகவல் பெறும் வழியையும், வேலை தேடும் சாதனங்களையும், மற்றும் வேலை கிடைக்க உதவும் மேலதிக ஆதாரங்களையும் அளிக்கிறது. சில மையங்கள் எவ்வாறு வேலை தேடுவது, தொழில் முடிவுகள் செய்வது, மற்றும் வேலை நேர்முகப் பேட்டியை நன்கு செய்வது என்பதற்கு பயிற்ச்சிப் பட்டறைகளும் வழங்கும். *Employment Ontario* பணிப்பின்னலின் ஒரு பகுதியாக, ஆன்டாரியோ வேலைவாய்ப்பு ஆதார மையங்கள் வாடிக்கையாளர்களைச் சமுதாயத்திலுள்ள இதர வேலைவாய்ப்புச் சேவைகளுக்குப் பரிந்துரை செய்யும்.

## யார் இந்தச் சேவைகளை அடையலாம்?

இந்தச் சேவைகள் வேலை தேடும் எல்லா கனடியர்களுக்கும் கிடைக்கக்கூடியதாக உள்ளன.

## மேலும் தகவல்களை நான் எப்படிப் பெறலாம்?

உங்கள் பகுதியில் உள்ள ஆன்டாரியோ வேலைவாய்ப்பு ஆதார மையம் ஒன்றின் தொலைபேசி எண் மற்றும் இருப்பிடத்தை அறியக் கட்டணமற்ற *Employment Ontario* நேரடித் தொடர்பை 1-800-387-5656 என்ற எண்ணிலோ, அல்லது டொரான்டோவில் (416) 326-5656 என்ற எண்ணிலோ அழையுங்கள்.

மாற்றாக, ஒரு குறிப்பிட்ட சமூகத்தில் உள்ள ஆன்டாரியோ வேலைவாய்ப்பு ஆதார மையம் ஒன்றின் தொலைபேசி எண் மற்றும் இருப்பிடத்தை www.edu.gov.on.ca/eng/tcu/search.html என்ற வலைப்பக்கத்தை அடைந்து தேடுங்கள்.